TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8108529

1. District மாவட்டம் : திருப்பூர் PS காவல்நிலையம் : ஊ.த.க.பிரிவு Year ஆண்டு : 2021 FIR No. மு.த.அ. எண் : 12/2021/AC/TPR Date நாள் : 06.12.20

2. (i) Act சட்டம் : The Prevention of Corruption Act Sections பிரிவுகள் : 7
(ii) Act சட்டம் : 1988 as amended by the Sections பிரிவுகள் :
(iii) Act சட்டம் : Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள் :
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 03.12.2021 Date to நாள் வரை : 04.12.2021
Time Period : நேர அளவு Time from நேரம் முதல் : 1730 hrs Time to நேரம் வரை : 1630 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.12.2021 Time நேரம் : 0900 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-II Time நேரம் : 0900 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS : குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 25 கி.மீ. தென்கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் : —
(b) Address : முகவரி : வருவாய் ஆய்வாளர் அலுவலகம், பொங்கலூர், பல்லடம் தாலுகா.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : K. முருகேசன்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : P. கனகராஜ்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 47 yrs
(d) Nationality : நாட்டினம் : இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் : —
Place of Issue : வழங்கப்பட்ட இடம் : —
(f) Occupation : தொழில் : லாரி தொழில்
(g) Address : முகவரி : 117/13, கண்டியன் கோயில், அழகுமலை, திருப்பூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. செந்தில்குமார், வருவாய் ஆய்வாளர், பொங்கலூர் பிர்கா, பல்லடம் தாலுகா, திருப்பூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

விபரம் இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு. அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. [signature] 6/12/21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 06.12.2021
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court 06.12.2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name பெயர் ......K. சசிலேகா
Rank நிலை ......................No. எண் ..........

காவல் ஆய்வாளர்,
உ.க.க. பிரிவு,
திருப்பூர்.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்றஎண். 12/2021/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 06.12.2021-ம் தேதி காலை 09.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது K.முருகேசன், S/o P.கனகராஜ்,117/13, கண்டியன் கோயில், அழகுமலை, திருப்பூர். என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் K.முருகேசன்(47), S/o P.கனகராஜ், 117/13, கண்டியன் கோயில், அழகுமலை, திருப்பூர். 9486142339. பெறுநர் உயர்திரு.காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத் துறை, திருப்பூர். ஐயா, நான் திருப்பூர், அழகு மலை கண்டியன் கோவிலில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் SET என்ற பெயரில் TN 56 A 0486 பதிவு எண் கொண்ட டிப்பர் லாரி வைத்து எம்.சாண்ட் மற்றும் கிராவல் மண் லோடு எடுக்கும் தொழில் செய்து வருகிறேன். நான் முறையாக அரசாங்க விதிமுறைகளை பின்பற்றி எம்.சாண்ட் மற்றும் கிராவல் மண் லோடு எடுத்து வருகிறேன். கிராவல் மண் லோடு எடுத்து செல்ல அரசாங்க காண்ட்ராக்டர் துணை இயக்குனர் புவியியல் மற்றும் சுரங்கதுறை அவர்களிடம் பெற்ற சிறுவகை கனிமம் அனுப்புகை சீட்டு பெற்று செல்ல வேண்டும். அவ்வாறு அவர்கள் கொடுக்கும் அனுப்புகை சீட்டுக்கு 4 யூனிட் கொண்ட ஒரு லோடுக்கு ரூ.475/- கட்டணமாக அரசாங்க காண்ட்ராக்டரிடம் கட்ட வேண்டும். நான் ஒவ்வொரு முறையும் எம்.சாண்ட் மற்றும் கிராவல் மண் லோடு எடுத்து செல்லும் போதும் அரசாங்க விதிமுறைகளை பின்பற்றி சிறுவகை கனிமம் அனுமதி சீட்டு மற்றும் இன்வாய்ஸ் பெற்று திருப்பூர் மாவட்ட பகுதிகளில் எடுத்து வருகிறேன். திருப்பூர் மாவட்டம், பல்லடம் தாலுகா,

பொங்கலூர் வருவாய் ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அவர்கள் என்னை அலுவலகத்திற்கு வந்து பார்க்க சொன்னார். அதன்படி நான் 03.12.2021 தேதி மாலை 5.30 மணிக்கு பொங்கலூர் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்கு சென்று வருவாய் ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அவர்களை பார்த்தேன். அப்போது அவர் என்னிடம் உனது லாரியில் அதிகமாக லோடு ஏற்றி செல்கிறாய். அதிக லோடு ஏற்றி செல்வதாக உயர் அதிகாரிகளுக்கு அறிக்கை அனுப்பி விடுவேன். நீ பிரச்சனை இல்லாமல் தொழில் செய்ய வேண்டுமென்றால் என்னை தனியாக கவனிக்க வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் அரசு விதிமுறைகளை பின்பற்றி ஒப்புகை சீட்டு பெற்றுதான் லோடு ஏற்றி செல்வதாக சொன்னேன். அவர் அந்த சீட்டு எல்லாம் செல்லாது எனக்கு நீ ரூ.30,000/- மாத மாமூலாக கொடுத்து கவனித்தால் எனது வருவாய் கிராமத்தில் நீ பிரச்சனையில்லாமல் லோடு கொண்டு செல்ல முடியும் என்று கூறினார். அதற்கு நான் அவரிடம் தொழில் சுமாராகத்தான் போய் கொண்டிருக்கிறது. லாரிக்கே தவணை கட்ட சிரமமாக உள்ளது என்று கூறினேன். உடனே அவர் ரூ.5,000/- குறைத்து விட்டு ரூ.25,000/- உடன் நாளை என்னை வந்து பாரு என்று சொன்னார். அப்போது அவர் அவரது செல்போன் எண் 9944202764 கொடுத்துவிட்டு பேசிவிட்டு வரசொன்னார். எனது செல்போன் எண்ணை வாங்கிகொண்டார். 04.12.2021- ம்தேதி மாலை சுமார் 4.30 மணியளவில் எனது செல்போனுக்கு தொடர்பு கொண்டு பேசிய வருவாய் ஆய்வாளர் ஏன் பணத்துடன் வந்து பார்க்கவில்லை என்று கேட்டார். நான் அவரிடம் வெளிவேலைக்கு சென்று விட்டதால் வர முடியவில்லை என்று சொன்னேன். உடனே அவர் திங்கட்கிழமை மதியத்திற்கு மேல் வந்து பார்க்க சொன்னார். நான் சரிங்க சார் என்று சொன்னேன். நான் அரசாங்க விதிமுறைகளை கடைபிடித்து தொழில் செய்து வருவதால் எனக்கு லஞ்சமாக ரூ.25,000/- வருவாய் ஆய்வாளருக்கு கொடுக்க விருப்பமில்லை. எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxx K.Murugesan 6/12/21. Sir, Received the complaint on 06.12.2021 at

09.00 hrs and conducted enquiry between 09.00 hrs to 09.30 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.12/2021/AC/TPR u/s 7 of PC Act 1988 as amended by 7 of PC (Amendment) Act 2018 at 09.30 hrs. Sd/- xxxx (K.Sasilekha). 06/12/2021 Inspr. V&AC, TPR.

Original FIR along with original written complaint of Tr.K.Murugesan, S/o P.Kanagaraj, 117/13, Kandiyan Koil, Azhagu Malai, Tiruppur is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

06.12.2021

(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur.